DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 248/2024** |
| Deposition of Witness for | : PW 6 |
| Name | : திரு.செல்வக்குமார் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 06.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 6th February2026.

**எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது திருநெல்வேலி மாநகரம் ஒருங்கிணைந்த குற்றப்பிரிவு மற்றும் புலனாய்வுத்துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.04.2014 ம் தேதி 18.30 மணிக்கு சின்னகோவிலான்குளம் காவல்நிலைய உதவி ஆய்வாளராக பணியில்இருந்தபோது மாடசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன்தன்மைக்கேற்ப காவல்நிலையக்குற்ற எண்.76/2014 ச/பி.379 இதச படி முதல்தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதன் அசல் நகலை சங்கரன்கோவில் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்து மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்து, அதன் ஒரு நகலை எனது விசாரணைக்கு எடுத்துகொண்டு

அன்றைய தினம் 19.30 மணிக்கு வழக்கின் சம்பவம் இடம் சென்று சாட்சிகள் மாடசாமி, சண்முகையா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை டார்ச் லைட்

வெளிச்சத்தில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.7 ஆகவும், மாதிரிவரைபடம் அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் மாடசாமி, முருகன், குருசாமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். சம்பவ இடத்தை பார்வையிட்டபோது என் உடன்இருந்த சாட்சிகளையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 17.04.2014 ம் தேதி சங்கரன்கோவில் வட்டாரப்போக்குவரத்து அலுவலக கண்காணிப்பாளர் சரவணக்குமார் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். மேலும், சாட்சி முனியசாமி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். மேற்படி வழக்கில் எதிரிகளை தேடி வந்தபோது 01.05.2014 ம் தேதி சங்கரன்கோவில்–சுரண்டை செல்லும் சாலை செந்தட்டி விலக்கில் நானும், முதல்நிலைக்காவலர் கண்ணன், காவலர் கார்த்திகைசெல்வன் ஆகியோர்களுடன் வாகனத்தணிக்கை செய்து கொண்டிருந்தபோது TN 67 B 1288 என்ற TVS Suzuki வாகனத்தில் வந்த இருவரை தடுத்துநிறுத்தி விசாரணை செய்தபோது அவர்கள் களப்பாகுளம் மாடசாமி மகன் பாலமுருகன் என்பதும், செல்லத்துரை மகன் சதீஸ்குமார் மகன் மரியராஜ் என்பதும் தெரியவந்தது. அவர்கள் இருவரையும் காலை 10.30 மணிக்கு கைது செய்து விசாரித்தேன். மேற்படி இருவரையும் விசாரித்தபோது அவர்கள் இருவரும் தாமாக முன்வந்து எந்தவித வற்புறுத்தலும் இன்றி இவ்வழக்கில் குற்றம் செய்ததாக ஒப்புக்கொண்டு பாலமுருகன் ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் பாண்டி மற்றும் பேச்சிமுத்து ஆகியோர் முன்னிலையில் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் பாலமுருகன் தனது குடும்பத்தை பற்றியும், வழக்கு சம்பவத்தை பற்றியும், அந்த சம்பவத்தில் அவருடன் ஈடுபட்டிருந்த சின்னகருப்பன் மகன் அழகப்பன், முத்துராமன் மகன் ராமதுரை ஆகியோர் பற்றியும், எதிரிகள் நான்குபேரும் சேர்ந்து 10.03.2014 ம் தேதி இரவு 10.30 மணிக்கு புகார்தாரருக்கு சொந்தமான பட்டியில் அடைக்கப்பட்டிருந்த ஒரு ஆட்டை திருடிக்கொண்டு இருசக்கரவாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது ஆட்கொண்டார்குளத்தில் மற்றொரு வாகனத்தில் வந்த இருநபர்கள் இவர்களை துரத்தியதாகவும், ஆட்டை திருவேங்கடம் சந்தையில் ரூ.4500 க்கு விற்பனை செய்ததாகவும், அந்த பணத்தை தண்ணீ அடித்து செலவு செய்ததாகவும், மேற்படி

குற்றத்தில் சம்பந்தப்பட்ட மற்றொரு வாகனமான TN 76 U 4145 என்ற வாகனத்தை பற்றியும் கூறினார். திருடுபோன ஆடு விற்கப்பட்டுவிட்டதால் என்னால் கைப்பற்ற இயலவில்லை. அந்த இடத்தில் 10.45 மணிக்கு சாட்சிகள் பாண்டி மற்றும் பேச்சிமுத்து முன்னிலையில் அத்தாட்சி பிறப்பித்து TN 67 B 1288 என்ற TVS Suzuki வாகனத்தை கைப்பற்றினேன். பின்பு 11.45 மணிக்கு சங்கரன்கோவில் திருவேங்கடம் சாலையில் செயல்பட்டுவரும் முத்து என்பவருக்கு சொந்தமான இருசக்கரவாகன விற்பனை நிலையத்தில் வைத்து எதிரி அடையாளம் காட்டிய TN 76 U 4145 என்ற வாகனத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். **எதிரி பாலமுருகனின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. TN 67 B 1288 என்ற TVS Suzuki என்ற வாகனத்தை கைப்பற்ற பிறப்பிக்கப்பட்ட அத்தாட்சி அ.சாஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. TN 76 U 4145 என்ற இருசக்கர வாகனத்தை கைப்பற்ற பிறப்பிக்கப்பட்ட அ.சாஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் வழக்கின் மற்ற எதிரிகளான அழகப்பன், ராமதுரை ஆகியோரை தேடியபோது களப்பாகுளம் பஸ்ஸ்டாப்பில் வைத்து 12.30 மணிக்கு அழகப்பன், ராமதுரை ஆகியோரை கைது செய்து நிலையம் வந்து நீதிமன்றத்திற்கு தக்கவழிக்காவல் மூலம் அனுப்பிவைத்தேன். சாட்சிகள் பாண்டி, பேச்சிமுத்து, முத்து ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். 02.05.2014 ம் தேதி சாட்சிகள் கண்ணன் மற்றும் கார்த்திகைசெல்வன் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கின் சொத்தை நீதிமன்றத்திற்கு ஒப்படைத்தேன். **TN 67 B 1288 என்ற TVS Suzuki வாகனத்திற்கான படிவம் 91 அ.சா.ஆ.12 ஆகவும், TN 76 U 4145 என்ற வாகனத்திற்கான படிவம் 91 அ.சா.ஆ.13 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. TN 76 U 4145 வாகனத்திற்கான போட்டோ சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. TN 67 B 1288 என்ற TVS Suzuki வாகனத்திற்கான சா.பொ.2 ஆக குறியீடு செய்ய்பபடுகிறது.** 30.05.2014 ம் தேதி வழக்கின் விசாரணை முடித்து எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவு 379 ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**1,3 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

முதல்தகவல் அறிக்கையில் சம்பவமானது 10.03.2014ம் தேதியில் நடைபெற்றதாக துலங்குமா என்றால் துலங்கும். புகார் மனுவானது காவல்நிலையத்தில் 13.04.2014ம் தேதி கொடுக்கப்பட்டதாக முதல் தகவல் அறிக்கையில் துலங்குமா என்றால் துலங்கும். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் 10.03.2014ம் தேதிக்கு மறுநாள் புகார் மனு என்னிடம் அளிக்கப்படவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளிலிருந்து ஒரு மாதம் கழித்து காலதாமதமாக புகார் அளிக்கப்பட்டதற்கான காரணம் முதல் தகவல் அறிக்கையில் துலங்குமா என்றால் துலங்காது. முதல் தகவல் அறிக்கை 16.04.2014ம் தேதி நீதிமன்றத்தல் சமர்ப்பிக்கப்பட்டதாக துலங்கும் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதிலிருந்து 3 நாட்களுக்கு பிறகு நீதிமன்றத்தில் சமர்ப்பித்ததற்கான காரணம் முதல் தகவல் அறிக்கையில் துலங்குமா என்றால் துலங்காது. புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கை புகார்தாரருடன் சேர்ந்து என்னால் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. புகார்மனு புகார்தாரரால் அவரது கைப்பட எழுதிக் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. புகார் மனுவில் உள்ள விபரங்கள் யாரால் எழுதப்பட்டது என்ற விபரம் எனது விசாரணையில் துலங்காது என்றால் சரிதான். புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையில் திருட்டு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளிற்கு மறுநாள் எத்தனை மணிக்கு ஆட்டை பார்க்க சென்றதாக குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். புகார்தார் என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் சாட்சிகள் முருகன் மற்றும் குருசாமி ஆகியோர் வாகனத்தின் பதிவெண்ணை குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். சாட்சிகள் முருகன் மற்றும் குருசாமி ஆகியோர்கள் என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளன்று இரவு 11 மணியளவில் கோழிப்பண்ணைக்கு நடந்து சென்று கொண்டிருந்ததாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். அந்த சாட்சிகள் இருவரும் மலம் கழிப்பதற்காக சென்று கொண்டிருந்ததாக கூறினார்கள். மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜரில் காட்டப்பட்டுள்ள ஆட்டுப்பட்டி திறந்தவெளி ஆட்டுப்பட்டியா அல்லது ஷெட் போட்ட ஆட்டுப்பட்டியா என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் குடியிருப்புகள் நிறைய உள்ளன என்றால் சரிதான். சம்பவ

இடத்திற்கு அருகில் உள்ள குடியிருப்புகளில் வசிக்கும் நபர்கள்யாரையும் இவ்வழக்கில் சாட்சிகளாக நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் உண்மையில் நடைபெறவில்லை என்றாலும், அவ்வாறு நடைபெற்றிருந்தால் சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள குடியிருப்புகளில் வசிக்கும் நபர்களை விசாரித்திருப்பேன் என்றாலும் சரியல்ல. சம்பவத்தை நேரில் கண்ட கண்கண்ட சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவம் தொடர்பாக சின்னச்சாமி என்ற நபரை நான் விசாரித்துள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன்விசாரணை மேற்கொண்ட அதிகாரி நான்தான் என்றால் சரிதான். புகார்தாரர் ஆடு வளர்த்து கொண்டிருப்பதாக காண்பிக்கும் போட்டோ என்னிடம் எதுவும் விசாரணையில் கொடுத்தாரா என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் கூறியவிபரங்கள் அனைத்தும் உண்மையல்ல என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**2,4 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி 1,3 எதிரிகள் தரப்பில் எடுக்கப்பட்ட குறுக்குவிசாரணையை அடாப்ட் செய்துகொள்வதாக தெரிவித்தார்.**

**மறுவிசாரணை இல்லை.**